கரணங்கள் ஒடுங்கிய அந்தப் பேரொடுக்கத்தில் காணக்கூடிய பெருஞ்சோதி என்று அழைத்து, இந்தக் காட்சி நிலையைச் 'சும்மா இருத்தல்' என்று தாயுமானவர் கூறுவார். அருணகிரியாரும் இதனையே,

சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே

என்கிறார்.

திருப்புகழிலும் இதனை அருணகிரியார் பாடுகிறார்.

காவி யுடுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறிக்
காய்கனி துய்த்துங் காயமொறுத்துங்
காசினி முற்றுந் திரியாதே
சீவ வொடுக்கம் பூத வொடுக்கம்
தேற வுதிக்கும் பரஞான
தீப விளக்கங் காண எனக்குன்
சீதள பத்மம் தருவாயே.

விவேகானந்தருடைய வாழ்க்கையில் அவர் இராகிருஷ்ண பரமஹம்சரை நேரிலே சந்தித்தபோது நடந்த நிகழ்ச்சியை இங்கே நினைவு கூறலாம். குருநாதன் சீடனைத் தன் முன்னே எதிர்வைத்து, பரிச தீட்சை என்ற தொட்டுக்காட்டும் உத்தியைக் கையாண்டு ஞான ஒளியைத் தூண்டினார். அந்த ஒரு வினாடியில் விவேகானந்தர் ஞானியாக எழுந்துவிட்டார்.

இதுவே மோனத்தில் ஞானத்தின் ஒளிகாணும் வித்தையாகும். இது கைவரப் பெறாதவர்கள் வாய் பேசாமல் மௌனியாக இருப்பதாலும், தாடியும் சடையும் வளர்த்துப் புறக்கோலம் பூண்டு திரிவதாலும் எத்தகைய பயனும் இல்லை.

ஞானக் கும்மியிலே சித்தர் இதனை மிகுந்த வேகத்தோடு பாடுகிறார்.

தாடி வளர்த்துச் சடைவளர்த்து - நல்ல
சந்நியாசி என்றொரு வேடமிட்டு
ஓடித் திரிந்த புலையாட்டை - இங்கு
ஒப்புவ தாரடி ஞானப் பெண்ணே!

என்பது ஞானக் கும்மி. புலையாடு என்பது வெள்ளாட்டை. அதற்குத் தாடி போன்ற 'அதர்' என அழைக்கப்படும் சதை தொங்கும். இந்தச் சதையைத் தான் திருமூலரும் வேறோர் இடத்திலே 'ஆட்டின் கழுத்தில் அதர்' என்றார்.

உண்மையான ஒளி ஞானம் என்பது ஞானகுருவானவன் சீடனுக்குத் தொட்டுணர்த்த வேண்டிய மெய்க்கூற்றின் இரகசியமாகும். உயிரின் சிறப்பறிவு விழிப்படையும்போது அந்த ஒளி அகக்கண்ணுக்குப் புலனாகிறது. உடனே தலையினுள்ளே அதிர்வு போன்ற ஓர் உணர்வு

நிகழ்கிறது. இதனைத்தான் வடநூலார் 'ஸ்பந்த ஞானம்' என்று அழைக்கிறார்கள்.

இந்த ஞானமானது ஏற்கனவே உடம்புக்குள் மறைந்து கிடந்த ஒன்றுதான். அது நீறுபூத்த நெருப்பாக இருந்தது. அதனைக் கிளறியவன் ஞானாசிரியனாவான். இந்த உணர்வுதான் மாணவனுடைய சிந்தனையிலே பெருகி வளர்ந்து பரநாதமாகவும் பரவிந்துவாகவும் கூடுகிறது. இந்தப் பேருபகாரத்தைச் செய்யும் குருவையே சித்தர் இலக்கியம் 'அவபோத குரு' என்று அழைக்கிறது. இந்த நிலைக்கு உரிய மாணவனைத் 'தீவிர தர சத்திநிபாதம்' என்றும், அவனுடைய நிலையைச் 'சத்தியோ நிர்வாணம்' என்றும் ஞானிகள் அழைக்கிறார்கள்.

சொற்களினால் சொல்லப் பெறாததும், தொட்டுணர்த்த உணரப் பெறுவதுமான இரகசியக் கல்விக்கு 'மூலமந்' என்றும், 'பிரணவ தீட்சை' என்றும் வடநூலார் பெயரிட்டு அழைக்கிறார்கள். இத்தகைய கல்வியைக் கற்பிப்பவனே 'ஞானகுரு' என்றும், இதனை உணர்த்தாமல் வெறும் சடங்குகளைக் கற்பிப்பவனைப் 'போதகுரு' என்றும் ஞான இலக்கியம் பேசுகிறது என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

வடமொழி ஞானநூல்களில் காணப்பெறுகின்ற ரிஷிகள் கற்பிக்கும் ஞானமும், சித்தர் இலக்கியத்தில் காணப்பெறுகின்ற சூக்கும ஞானமும், இரண்டும் ஒன்றே. இன்னும் சொல்லப்போனால் உலக மொழிகள் அனைத்திலும் பேசப் பெறுகின்ற மெய்யான ஞானம் இதுவே. எந்த நாட்டில் பிறந்தாலும், எந்த மொழியைப் பேசினாலும், மனிதர்கள் அனைவருடைய உடலமைப்பும் அதன் இயக்கமும் ஒரே படித்தானவை அல்லவா! அதற்குள் மறைந்து நிற்கின்ற ஞானப் பேரொளியும் ஒன்றே. இதை அகக்கண்ணால் காணும் நெறியும் ஒன்றேதான்.

தமிழ் மக்களுடைய பெரிய பேறு என்னவென்றால், ஞானத்தைப் புகட்டுகின்ற நூல்களிலே, எளிய தோத்திரப் பாடல்களால் ஆன நூல்கள் பலவாக உள்ளன. அவற்றிலும் முக்கியமாக ஞானிகள் வழங்கியுள்ள சித்தர் இலக்கியமான பாடல்களிலே பலவும், இத்தகைய புகழ்ப்பாவின் வடிவிலே அமைந்த ஞானப் பெருநூல்களாக விளங்குகின்றன.

தொகை நூல்களாக வழங்கி வருகின்ற பல்லோர் யாத்த பாடல்கள் ஒருபுறம் இருக்க, முழுநூல் வடிவிலே துதிப் பாடல்களுக்குள்ளே சித்தர்களின் ஞானப் பொருள் உபதேசம் அனைத்தையும் உள்ளடக்கித் திகழ்கின்ற அரிய இலக்கியங்களில், திருமந்திரம் ஒப்புயர்வு அற்ற பெருநூல், அந்த வரிசையிலேயே வைத்து எண்ண வேண்டிய பிற நூல்களிலே, காலத்தால் முற்பட்ட பனுவல்களில், அவ்வையாரின் அகவலும், மாணிக்கவாசகரின் திருவாசகமும் குறிப்பிடத்தக்கவை.

அவ்வையாரின் காலத்தைப் பற்றிய சர்ச்சை நமக்குத் தெரியும். இந்தச் சர்ச்சையின் உள்ளடங்கிய வினாவாக அவ்வையார் ஒருவரா, பலரா எனற ஐயமும் எழுந்து வந்துள்ளது. இதை ஓரளவு பார்த்தோம். ஆனால் திருவாசகத்தைப் பற்றிய சர்ச்சையிலே மாணிக்கவாசகர் ஒருவரா, இருவரா என்ற கேள்விக்கு இடமில்லை. ஆனால் அவருடைய காலத்தைப் பற்றிய ஆய்வு இன்றளவும் தெளிவான முடிவுக்கு வராத ஓர் இலக்கிய வினாவாகவே இருக்கிறது. தேவார காலத்திற்கு மிகவும் முற்பட்டது என்றும், ஏன் சங்க காலத்தையே ஒட்டியது என்றும் சொல்லும் பேரறிஞர்கள் நமக்குத் தெரியும். அவ்வாறே தேவாரத்திற்குப் பிற்பட்டதே திருவாசகத்தின் காலம் என்று சொல்வாரும் உண்டு.

எனது இந்த ஆய்வுநூலுக்குரிய நோக்கம், இந்த நூல்களின் சித்தர் ஞான உட்கிடையைக் காணுவதே என்ற நிலையில், காலத்தைப் பற்றிய விரிவான நீண்ட சர்ச்சைக்குள்ளே நாம் புகுவதற்கு இது இடமன்று. அதோடு அதற்குரிய புறச்சான்றுகள் போதுமான அளவில் இடமில்லை. இந்நிலையிலே திருவாசகத்தைப் பற்றிய ஒரு பெரிய உண்மையை மட்டும் இங்கே குறிப்பிட வேண்டும்.

திருவாசகத்தில் வருகின்ற (1) சிவபுராணம், (2) கீர்த்தித் திருவகவல், (3) திருவண்டப் பகுதி, (4) போற்றித் திருவகவல் ஆகிய நான்கு பகுதிகளும் சித்தர் ஞானத்தின் உட்பொருளை விளக்கும் மிகச் சிறந்த பனுவல்களாம். இவையும் அவ்வையாரின் நூலைப் போன்று அகவல் யாப்பிலேயே அமைந்துள்ளன.

அகவல் என்ற யாப்பு ஞான அதிர்வுகளுக்கு உரிய ஒலி நுட்பம் கொண்டது என்பதை, விநாயகர் அகவலை ஆயும்போது கண்டோம் அல்லவா? எனவே மீண்டும் மாணிக்கவாசகரின் அகவல்களை ஆயும்போது யாப்பின் நுட்பத்தை இங்கே நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். கலிவெண்பாவுக்கும் அகவலுக்குரிய ஒலிஅதிர்வுச் சட்டம் பொருந்தும்.

சுந்தரமாணிக்க யோகீசுவரர், சித்தர் கண்ணப்ப சுவாமிகள் சிவயோகி இரத்தினசபாபதியார், மௌன சுவாமிகள், இன்னும் பல பெயர் தாங்கி உலவிய சித்தர் பெருமக்கள் ஆகிய பல பெரியோர்களும், தங்களுடைய மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் ஞானக் கல்லியிலே, விநாயகர் அகவலோடு சேர்த்துத் திருமந்திரத்தின் சில பகுதிகளையும், திருவாசகத்தில் வருகின்ற மேற்கண்ட நான்கு அகவல்களையும் பேரறிவுப் பாடநூல்களாக நடத்தி ஞானவிளக்கம் கூறுவது உண்டு. இப்பெரியோர்களில் சிலர் எழுதிப் போந்த உரை விளக்கங்கள் சுவடி வடிவிலும் ஞானம் பயிலும் மாணவர்களிடையே வழங்கி வருகின்றன. இந்த உரைகளின் துணைகொண்டு, விநாயகர் அகவலை ஆராய்ந்த முறையிலேயே, மாணிக்கவாசகரின் பாடல்களையும் இங்கே ஆராயப் புகுவது பொருத்தமுடையதாகும்.

சிவபுராணத்தில் வருகின்ற நுட்பங்களையும், கீர்த்தித் திருவகவலில் வருகின்ற அஞ்சலி மொழிகளுக்குள்ளே காணுகின்ற உட்கிடை

களையும், திருவண்டப் பகுதியின் ஞானப் புதையலையும் போற்றித் திருவகவலுக்குள்ளே காண்கின்ற சூக்கும ஞான அநுபவங்களையும் ஆராய்ந்து பார்க்கும்போது, இந்த மாணிக்கவாசகரின் நூல் ஓதி வழிபடுனதற்குரிய தோத்திரப் பனுவல் மட்டமன்று, சித்தர்களின் மெய்ஞ் ஞானம் அனைத்தையும் தன்னுள் அடக்கித் திகழ்கின்ற ஒரு பெரிய ஞான இலக்கியமும் ஆகும் என்பதை உணர்வோம்.

இரண்டு வகையான அறிவுக்கும் ஒருசேர அமைந்த ஓர் இலக்கியமாக விநாயகர் அகவலும் மணிவாசகரின் அகவலும் அமைந்துள்ள இயைபு ஒருபுறமிருக்க, பூசனை செய்யும் சாமானியர்கள் பாடித்துதிக்கின்ற தோத்திர நூல்களிலே, தீவிரதர நிலையிலுள்ள ஞானப் பயிற்சியாளர்களும் பயன்பெற வேண்டிய ஞானக் கருவூலங்களை உள்ளடக்கி இந்த நூல்கள் விளக்குவது மேலும் ஒரு சிறப்பாகும்.

திருப்பெருந்துறையிலே மணிவாசகருக்கு ஞானகுரு வழங்கிய மெய்ஞ்ஞானத்தின் வெளியீடாக அமைந்த நான்கு அகவற்பனுவல்களையும், சித்தர்களின் ஞானத் துறையிலே நடந்துசென்று உட்பொருளைக் காணப் புகுவோமாக!

# 7. சிவ புராணம்

திருவாசகம் பல நூறு ஆண்டுகளாக நம்முடைய தமிழகத்திலே பக்தர்களின் பூசனைக்கு உரிய ஒரு துதிநூலாக வழங்கிவருகிறது. சைவத் திருமுறைகளில் எட்டாவது திருமுறையாக வைத்து வணங்கப்பெறுவதோடு, அதனுடைய உருக்கத்தைத் தமிழ்கூறும் நல்லுலகம் உணர்ந்து அநுபவித்துத் 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்' என்று வி"ந்து வந்திருக்கிறது.

இந்த நூலின் உருக்கமும், இதயத்தை நெகிழ்விக்கும் பக்திப் பாங்கும், தமிழ்மக்கள் நன்கு அறிந்த சிறப்புக்கள்; பக்தி உலகம் பாடி மகிழ்ந்த அநுபவங்கள். ஆனால் இந்த நூலில் உள்ள சித்தர் இலக்கியப் பாங்கும், ஞான இரகசியங்களும், தீவிரதர நிலையில் உள்ள ஞானப்பயிற்சி செய்யும் மாணவர்க்கே தெரிந்த உண்மைகளாம். முக்கியமாக, சிவபுராணம் முதலிய முன்னர்க் கூறிய நான்கு பனுவல்களும் சித்தர் இலக்கியத்தின் இலக்கணத்திற்கு அற்புதமான முறையிலே சான்று பகர்கின்றன.

திருவாசகம் ஒரு பக்தி நூலாகவும், சித்த நூலாகவும் ஒருங்கிணைந்து விளங்குவதால், இந்த நான்கு பனுவல்களுக்கும் பக்தர்கள் கூறுகின்ற சமய உரையையும், ஞானம் பயில்வோர் கூறுகின்ற சித்தர் உரையையும் ஒப்புநோக்குதல் இந்த ஆய்வுக்குப் பொருந்துவதாகும். இம்முறையிலே முதலில் சிவ புராணத்தைக் காண்போம்:

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பஞ்ஞகன்றன் பூங்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி
ஆராத வின்பம் அருளுமலை போற்றி

சிவனவ னென்சிந்தை யுள்நின்ற அதனால்
அவனரு னாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலாக் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியா
யெண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லரசு ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறத்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும்வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊறான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

இந்தப் பனுவல் சமய மரபுவழி உரைக்கும், சித்தர் மரபு வழி உரைக்கும்விரிவான இடம் தந்து இரண்டு உரைகளுக்கும் இருவேறு இயல்பைத் தருவதாக அமைந்துள்ளது.

திருப்பெருந்துறை என்பது இன்று ஆவுடையார் கோவில் என வழங்கும் சிவத்தலம் என்பது சமயிகள் கூற்று. ஆனால் சித்தர் மரபோ என்றால், திருப்பெருந்துறை என்பது மனித உடலிலே உள்ள 'சகஸ்ரதளம்' என்கிறது. இவ்வாறே சொற்களுக்கு உரிய பொருள் கோளில் மாறுபடுவதோடு கருத்தின் உட்கருத்தாக விளங்கும் பொருண்மையிலும் இரண்டும் வேறுபடுகின்றன. இந்த வேறுபாடுகளை விரிவாக காண்போம்.

சிவபுராணம் என்ற இந்தக் கலிவெண்பா எழுந்த சூழ்நிலையை விளக்கும் மரபு உரை வருமாறு: இது தருமை ஆதீனத்துத் திருவாசக வெளியீட்டின்கண் காணப் பெறுகின்ற அறிமுக உரை.

"திருப்பெருந்துறையில் குரூக்க மரத்தடியில் குருவடிவாக எழுந்தருளி, அருளாரமுதத்தை வழங்கிய சிவபெருமான், மாணிக்கவாசகப் பெருந்தகையாருக்கு அருட்கண் பாலித்து, 'சிதம்பரத்தில் ஆன்மாக்களுய்ய அனவரதமும் ஆனந்த தாண்டவம் புரிந்தருளுகின்றோம்; ஆண்டு வருக" என்று ஆணை தந்து மறைந்தருளினார். வாதவூரடிகள், திடுக்கிட்டுக் குருவின் திருமேனி காணும் இணையிலாப் போகத்தையும் இழந்தோமே என்று இரங்கி, அன்பரொடு மருவுதலாகிய சிவநெறியில் தலைநிற்பாராய், அடியார்கள் கூட்டத்தை அடைந்தார். அங்கு அடியார்களும் தாமுமாகக் குருந்த மரத்தடியில் தெய்வப் பீடிகை ஒன்று செய்து அதல் குருநாதனுடைய திருவடித் தாமரைகளை அமைத்து வணங்கி வந்தார். ஒருநாள் இவர் உள்ளத்து 'இறைவன் அடியடைந்தார் அன்பிலாதாராயிருப்பினும், பாடிப் பரவுவார்க்கு இரங்கியருள்புரிவன்' என்ற எண்ணம் திருவருள் விளக்கத்தால் உதயமாயிற்று. உடனே மங்கலச்சொல் யாவற்றிற்கும் தலையாயதும், தான் மங்கலமாதலேயன்றித் தன்னைச் செபிப்பார்க்கும் தியானிப்பார்க்கும் பெருமங்கலத்தைத் தரவல்லதும், வேதவிருக்ஷத்து வித்தாயுள்ளதும், ஞான சம்பந்தப் பெருந்தகையாரால், 'வேத நான்கினும் மெய்ப்பொருளாவ' தென்றும், 'செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு அந்தியுள் மந்திர' மென்றும், திருநாவுக்கரசு சுவாமிகளால், 'கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவ' தென்றும், 'நாவினுக் கருங்கலம்' என்றும், 'நல்லக விளக்கு' என்றும் பாராட்டப் பெறுவதும், தூலம் சூக்குமம் அதிசூக்குமம் என்ற மூன்று முறைகளால் ஓதப் பெறுவதும் ஆகிய திருவைந்தெழுத்தை முதலாக வைத்து 'நமச்சிவாய வாழ்க' என இக் கலிவெண்பாவை அருளிச் செய்தார்".

மேற்கண்ட உரை சமய மரபு தோய்ந்த புராண முறையிலே உள்ள பின்னணியில் எழுந்த உரையாகும். ஆன்ம நோக்கிலே பார்க்கும் பெரியோர்கள், இந்தச் சிவபுராணம் எழுந்ததன் நுட்பத்தை வேறு விதமாக விளக்குகிறார்கள். சான்றாகச் சிவயோகிகள், குண்டலினியை அகஉடம்பின் உள்ளிருந்து மேலெழுப்புகிற ஆன்மக் கல்வியே நெஞ்சில் நீங்காத நாதன் தாள் என்று விளக்கம் கூறி, அத்தகைய சகஸ்ரதள ஆன்மக் கல்வியிலிருந்து இந்த நூல் எழுந்ததாகக் கூறுவர். இதை ஒட்டிச் சிவயோகியார் தருகிற முகப்பு வருவாறு:

"சிவபுராணம் என்றால் சிவத்தைப் பற்றிய பழங்கதை எனப் பொருள்படும். சிவம் பிறவாதது. தோற்றக் கேடுகள் அற்றது. தோற்றக் கேடுகளுள்ள சீவர்களுக்கும் சிவத்திற்கும்

உள்ள தொடர்பையும், அத்தகைய தொடர்பை அறிவதில் உள்ள நன்மையையும், அறியாமையால் உள்ள தீமையையும் பற்றிச் சுருக்கமாக இத்தலைப்பில் கூறப்படுகிறது. ஆதலின் இத்தலைப்பு சிவபுராணம் என்று பெயர் பெற்றுள்ளது".

இனி, மூல நூலுக்கு வருவோம். இதற்குரிய உரைகளைக் கொண்டு சமயச் சார்புள்ள பண்டிதர்களின் விளக்கத்திற்கும் ஆன்மச் சார்புள்ள யோகிகளின் விளக்கத்திற்கும் எத்தனை வேறுபாடு உள்ளது என்பதை ஆயுவதானது, திருவாசகத்தில் உள்ள இந்த நான்கு பனுவல்களும் சித்தர் இலக்கியமாகவே ஞானிகளால் கருதப்படவதன் இயைபை நன்கு உணர்த்தும்.

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க

இந்த வரிக்குச் சைவ சமயிகள் சொல்லுகிற பொருள் தமிழ் உலகு நன்கு அறிந்த பொருளாகும். நமசிவாய என்பது திரு ஐந்தெழுத்து. இதனைத் தூலபஞ்சாக்கரம் என்பர். இதனை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதனால் இதுவே 'சிவாய நம' என்று ஆகிறது.

ஐந்தெழுத்தின் மகிமை குறித்துச் சைவ நூல்கள் மிக விரிவாக ஓதுகின்றன. சைவ சமயத்தில் தனிப் பெருங்கடவுளாகிய சிவனை 'நமசிவாய' வடிவத்தில் வணங்குவதே பக்தர்களின் அடிப்படைக் கல்வியாகும்.

சரியை, கிரியை வழியிலே சிவதீட்சை பெறுபவர்களுக்குச் சமய குருமார்கள் இந்த ஐந்தெழுத்தையே சொல் வடிவில் உபதேசம் செய்கிறார்கள், செவி வழியாக இந்தத் தீட்சை பெற்ற பின் சரியையிலே தோய்ந்த பக்தர்கள் இந்த ஐந்தெழுத்தை ஓதுகிற ஜப முறையை மேற்கொள்ளுகிறார்கள். அக்கமாலை அணிவதும், அதனைக் கையில் தாங்கி இந்த மந்திரத்தை உருவேற்றுவதும், சரியையிலும் கிரியையிலும் ஈடுபட்டார் செய்கின்ற பூசையின்பாற்படும். இதற்கு ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுமுறை என்று சொல்லி அவருடைய பக்குவத்திற்கு ஏற்ற வகையிலே, இருக்கைகள் அல்லது ஆதனங்கள் கற்பித்துச் சமய குருமார்கள், சமய தீட்சை தருகிறார்கள். இந்த முறையிலே 'நமசிவாய வாழ்க' என்பதற்கும், நாதன் தாள் வாழ்க என்பதற்கும் இந்தச் சொற்களின் அடிப்படையிலேயே பொருள் கூறுகிறது சமய உலகம்.

இதனையே சித்தர் வழி நிற்பார் காணுகிறபோது முறை வேறு. ஏதனால் இது மாறுபடுகிறது என்றால் சரியை வழியில் நிற்பவர்கள், 'நமசிவாய'ப் பொருளான இறைவன் பற்பல சிவத்தலங்களில் அமர்ந்திருக்கிறான் என்று கண்டு, அந்தந்தத் தலங்களுக்கே சென்று, அவனை வணங்குவதன் வாயிலாக ஆன்மா கடைத்தேறுகிறது என்கிறார்கள். அவ்வாறு, அவனை வணங்குவதற்கு உரிய மந்திரம் 'நமசிவாய' என்று கொள்கிறார்கள். கிரியை வழியில் நிற்பவர்கள் சிவபெருமானை இந்தத் தலங்களிலே காணுவதோடு கூட, அவரவர் தம் இல்லங்களிலும், வேறு இடங்களிலும், சிவலிங்க வடிவத்தை வழி

படுகிற பூசனை முறையையும் மேற்கொள்கிறார்கள். இவர்களுக்கு உரிய மந்திரமும் இதே ஐந்தெழுத்தாகும்.

யோகநெறி பயில்வார்களோ என்றால் இறைவனைத் தங்கள் உடம்புக்குள்ளே கண்டு ஆன்ம லிங்கத்தை வழிபடுவதால் உயிர் கடைத்தேறுகிறது என்பார்கள்.

ஞானநெறி பயில்வார்களோ என்றால், இறைவன் அறிவின் உருவானவனானதால் ஆன்மா தனது சிற்றறிவை விட்டுச் சிவலிங்கமாகிய பேரறிவைப் பற்றவேண்டும் என்பார். ஆகையினால் சைவ சமயிகளுக்குரிய நமசிவாய என்ற மந்திரம் சம்பந்தப்பட்டவரை, இந்த நான்கு வழிச் செல்வோரும் நான்கு வகையான கருத்துடன் இந்த மந்திரத்தை அணுகுகிறார்கள். எனவே நாதன் தாள் என்பது அவரவர்களுடைய பக்குவத்திற்கு ஏற்ப வெவ்வேறு பொருள் பெறுகிறது.

இந்த அடிப்படை உண்மையை மனத்திற்கொண்டு பார்த்தால் கீழ்கண்ட திருமந்திரப் பாடலின் பொருள் - மெய்ப்பொருள் துலங்கும்.

இவனில்ல மல்ல தவனுக்கங் கில்லை
அவனுக்கும் வேறில்லம் உண்டா அறியின்
அவனுக் கிவனில்ல மென்றன் றறிந்தும்
அவனைப் புறம்பென் றரற்றுகின் றாரே.

ஐந்தெழுத்தை மனத்தில் வாங்கி, அதற்குரிய சிவபரம்பொருளை வணங்குகின்ற இந்த நான்கு வகையான வழிகளிலே எது சிறந்தது என்ற கேள்வியும் உடன் எழுகிறது. இந்த நான்கு வழியைப் பின்பற்றுவோரும் வீடுபேறு அடைகிறார்கள் என்ற ஆதார உண்மை உறுதியாக இருப்பினும், இக்கருத்தை ஒட்டி யோக முறையிலே ஈடுபட்டோர் மேற்கோள் சொல்லுகிற ஒரு பாடல் பிரபுலிங்க லீலையில் வருகிறது. அது;

உரைசெயிற் பரம ஞான மொன்றுமே முத்திக் கேது
சரியைநற் கிரியை யோகந் தாமொரு மூன்றும் ஞானம்
மருவுதற் கேது வென்றே மறைபுகன் றுரைக்கு மிந்தக்
கருவியைப் பொருளென் றெண்ணிக் களிப்பவர் கயவ ரன்றே.

இந்தச் சர்ச்சை இவ்வாறு இருக்க, இந்த வேறுபாடு எந்த அடிப்படையில் தோன்றுகிறது என்ற நுட்பத்தை உய்த்துக் காண வேண்டும்.

சமயிகள் சிவபெருமானைச் சிவலிங்க உருவிலே கண்டு அவனே ஐந்தெழுத்தாகிய ஒலிவடிவிலும் உள்ளான் என்பதை உணர்ந்து இந்த மந்திரத்தை ஓதுகிறார்கள். எனவே, இவர்களுடைய பார்வையும் அணுகுமுறையும் புற உலகின் பாற்பட்டவை. யோகியரும்

ஞானியருமோ என்றால் சிவலிங்கத்தையே இந்த ஐந்தெழுத்தின் ஒலி வடிவிலே கொண்டு, இந்த ஒலி அதிர்வினால் ஏற்படக்கூடிய அக உடலின் ஒளியிலே, சிவலிங்கத்தை ஆன்ம சோதியாகக் கண்டு வழிபடுகிறார்கள். இதுவே இந்த வேறுபாட்டுக்கு உரிய அடிப்படைக் காரணமாகும்.

இத்தகைய காரணங்களினாலேயே, கூத்தப்பெருமானுடைய நடனத்தின் ஒலி வடிவம் ஞானியர்களுடைய இலக்கணத்திலே எழுந்தது. ஐந்தெழுத்தின் வடிவமாகிய, சிவமூர்த்தி தனது கூத்தை இயற்றும்பொழுது, இந்த ஐந்து எழுத்துக்களும் எந்தெந்த உறுப்பிலே எவ்வாறு நின்று ஒலி செய்கின்றன என்பதனை, 'உண்மை விளக்கம்' நமக்கு எடுத்துக் காட்டுகிறது. அந்த வெண்பா இங்கே நினைவுகூரத் தக்கதாகும்.

ஐந்து எழுத்துக்களும் அவற்றுக்குரிய நிலைகளும் இந்த வெண்பாவிலே விளக்கம் பெறுகின்றன;

ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகர்முகம் வாமுடியப் பார்.

நமசிவாய மூர்த்தியைப் புறவடிவங்களிலே கண்டு வணங்குவார்க்கு, ஐந்தெழுத்தின் உச்சாடனம் மனம் குவிகிற மார்க்கமாகக் கைகொடுத்து உதவுகிறது. இது சித்தர்களின் மொழியிலே சொல்வதாக இருந்தால் 'பொறிவழிப் பூசனை' முறையாகும். ஞானிகள் இந்த வழியையும் மோட்ச சாதனங்கள் பலவற்றுள் ஒன்று என்று ஒப்புக் கொண்ட போதும், இறைவனைக் கண்ணாரக் கண்டு துய்ப்பதற்கு இதுவன்று வழி என்று உதறிப் பேசுகிறார்கள். சித்தர் இலக்கியம் கற்பிக்கிற ஆன்ம வழிபாடு ஒன்றே உடம்பிலிருந்தவாறே இறைவனைக் காணுகிற ஒரே வழி என்று, உறுதியோடு சித்தர்கள் பேசுகிறார்கள். அறிவதற்கு ஒண்ணாத பேரறி வாகிய இறைவனைப் புலன்வழி சென்று காண முயல்வது வீண் என்பது, சித்தர் கொள்கை. திருமூலரும் இதையே வற்புறுத்துகிறார்:

அறிவுரு ஞானத் தெவரும் அறியார்
பொறிவழி தேடிப் புலம்புகின் றார்கள்
நெறிமனை யுள்ளே நிலைபெற நோக்கில்
எறிமணி யுள்ளே இருக்கலு மாமே.

இந்த முறையிலே வழிபடுவார்க்கு ஐந்தெழுத்தானது, எறிமணியான நடராசச் சோதிப் பிழம்பாக, ஐந்தெழுத்தையும் அந்தந்த நிலையிலே ஒலி செய்துகொண்டு கூத்தாடுகிறது.

இனி, அடுத்த வரிக்கு வருவோம்:

இமைப்பொழுதும் என்னெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க

இந்த வரிக்குப் பொருள் கூறுகிற சமயவாதிகள், இரவும் பகலும் இடைவிடாமல் என் நினைவிலே திருவடியைப் பதித்து நிற்கும்

எம்பெருமானுடைய திருவடிகள் வாழ்க, என்று பொருள் கூறுகிறார்கள். ஞான யோகியர்களோ, மறப்பு இருந்தால் அல்லவோ நினைப்புக்கு இடமுண்டு என்று கூறி, நினைப்பும் மறப்பும் அற்ற நிலையிலே அக உடலில் நிற்கின்ற திருவடிகள் என்று விளக்கம் கூறுவார்கள்.

சித்தர்கள் கூறுகிற இந்த ஆன்மப் பொருளுக்கு ஞானப்பயிற்சி மாணவர்களிடையே ஒரு விளக்கம் நிலவுகிறது. அதன்படி ஞானம் பயில்கிற மாணவன், ஈசான முகத்தை அறிந்துகொண்டால் அவனுடைய உள்ளம் இறைவனுடைய கோயிலாக மேம்படுகிறது என்பதாகும். சில சித்தர்கள் இதனையே சீவனைச் சிவனாக வழிபடுகிற முறை என்று அழைக்கிறார்கள். இதனையே சித்தர் இலக்கியம் சிவ வழிபாடு என்று கூறுகிறது.

ஞான வழிபாட்டிலே முன்னேறி நிற்கும் பெரியோர்களுக்கு, ஆன்ம வழிபாட்டுக்குரிய மூர்த்தி என்பது சதாசிவரின் மேல்நோக்கிய ஈசான முகமேயாகும். இது மின்னல் ஒளியின் வடிவம். இந்த ஒளி வடிவத்தை வணங்கும்போது, மின்னல் ஒளியுடன் கூடிய ஐங்கலை ஆற்றல்கள் எழுகின்றன. இவற்றை வடமொழியார் 'பஞ்சகலா சக்திகள்' என்று அழைப்பர். இந்த வழிபாடுதான் சித்தர்களின் ஐந்தெழுத்து வழிபாடு. இந்த வழிபாட்டிலேதான் இறைவனுடைய தாள் நெஞ்சத்திலே நீங்காது நிலைபெறுகிறது என்பது சித்தர்களுடைய கொள்கை.

ஈசான முகம் என்பது ஒளிவடிவமானது என்ற காரணத்தினால், ஒளிவழிபாடு இயற்றுகின்ற ஞானிகள், தங்கள் அகத்திலே இந்த ஒளியைக் காணுகின்ற நிலைபேறான காட்சியைப் பெற்று, அந்த ஆனந்தத்தை இமைப்பொழுதும் நீங்காத பேரின்பம் என்று, களிப்போடு கூறுகின்றார்கள்.

சரியையிலும் கிரியையிலும் ஈடுபட்டுள்ள பக்தர்கள், தங்களுடைய புறவழிபாட்டிற்குரிய கருவிகளிற் சில, தங்கள் உடலோடு ஒட்டிவிட்ட காரணத்தினாலும், தங்களுடைய சிவ சிந்தனை இடையீடின்று நிகழ்வதாலும், இறைவனுடைய தாள் தங்கள் நெஞ்சில் இருந்து இமைப்பொழுதும் நீங்குவதில்லை என்கிறார்கள்.

சிவபுராணத்தின் மூன்றாவது அடி வருமாறு;
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க

திருப்பெருந்துறையிலே மாணிக்கவாசகரை ஆண்டுகொண்டு அருளிய குருமணியாகிய தெய்வத்திற்கு, இந்த வரி அஞ்சலி செலுத்துகிறது. என்பதே சமயிகளின் விளக்கமாகும். 'கோகழி' என்பது திருப்பெருந்துறைக்கு இன்னொரு பெயராகும்.

சிவயோகி இரத்தினசபாபதியாரும், வேறு சில யோகிகளும், திருப்பெருந்துறை என்பது சிரசிலுள்ள ஆயிரம் தாமரையாகிய சகஸ்ர தளம் என்று உட்பொருள் கூறுகிறார்கள்.

மேலே கண்ட பொருளுக்கு இசைய, 'கோகழி' என்ற சொல்லுக்க முதுகந்தண்டு என்று சில ஞானிகள் பொருள் சொல்லுகிறார்கள்.

குண்டலினி என்னும் ஞான ஆற்றலை, கீழிருந்து மேலே செல்லுவதற்குரிய முறையிலே எழுப்புகிற ஞானப் பயிற்சிக்கு, உறுதுணையாக நிற்பது 'வெர்ட்டிபிரல் காலம்' (Vertebral Column) என்னும் முதுகெலும்பே யாகும். இது மூங்கிற்கழி போன்று அமைந்தது. இதைத்தான் தண்டு என்றும், பேரறிவு அல்லது ஞானத்தண்டு என்றும், சித்தர் இலக்கியம் அழைக்கிறது. இதனை ஞானவழியிலே ஆள்கின்ற முறையில் ஆள்வதே, கையாள்வதே, ஆன்ம ஆற்றலை எழுப்புகிற பயிற்சியாகும். இந்தப் பயிற்சியானது நூல்களின் வாயிலாகப் பெறமுடியாத அரியதொரு அநுபவப் பயிற்சியாகும். குருநாதன் எதிரில் இருந்து சீடனின் உடம்பைத் தொட்டு, முதுகெலும்பின் கீழிருந்து மேல்நோக்கி அதனை உராய்ந்து, சிரசிலே கொண்டு அந்த ஆற்றலைச் சேர்ப்பிக்க வேண்டும். இது ஞானக் கல்வியின் அடிப்படைப் பாடம். இதுவே மூங்கிற்கழியை ஆளுகின்ற முறை என்றும், இதனைக் கற்பிக்கும் ஆசானே ஞானகுரு அல்லது குருமணி என்றும், சித்தர் இலக்கியம் இயம்புகின்றது. சுழிகளில் எல்லாம் உயர்ந்த கழியாகிய மாட்சிமை தங்கிய கோகழியான முதுகந்தண்டை ஆண்டு அருளிய தமது ஞானகுருவாகிய இறைவனை, இந்த அடியிலே மாணிக்கவாசகர் வணங்குகிறார் என்பது சித்தர்கள் கூறுகிற பொருளாகும்.

சிவயோகியார் தமது சிவபுராண உரையிலே இந்த வரிக்குச் சொல்கிற மிக நீண்ட விளக்கத்திலிருந்து சில பகுதிகளை இங்கே ஒப்பு நோக்கலாம்:-

"கோ - அரசன்; கழி - கோல்; சுருமணி - ஒளிவிட்டு நிற்பவன்.

தேகத்தின் அரசன் ஆன்மா. ஆன்மாவின் தலைவன் இறைவன். இறைவன் ஆன்மாக்களைச் செலுத்தும் கோல் என்பது, மூலாதாரத்தையும் சகஸ்ரதளத்தையும் இணைத்து நிற்கும் முதுகந் தண்டாகும். இந்த முதுகந் தண்டின் அடிப்பாகத்தில் மூலாதாரச் சக்கரம் உள்ளது. மேல் பாகத்தில் சகஸ்ரதளம் உள்ளது. இதில் இடகலை பிங்கலை சுழுமுனை என்ற மூன்று நாடிகளும் உள்ளன. அறியாமையில் உள்ள போது உயிர்களை இடாநாடி பிங்கலநாடி என்ற அவனது திருவடியால் சிவன் நடத்துகிறான். ஞானியானபோது இருநாடிகளின் தன்மையும் மாறிச் சுழுமுனை நாடி பிரகாசத்தை அடைகிறது. சுழுமுனைக்கு அடியில் மூலாதாரத்தில் உள்ளவர் ஈசானராகப் பிரகாசிக்கிறார். மூலாதாரத்தில் இருந்த ஈசானரை மணிவாசகர் ஆரூரன் என்று குறிப்பிட்டுள்ளார். திருமந்திரத்தில் 'அதோமுக தரிசனம்' என்ற தலைப்பில் திருமூலர் இதை விளக்கியுள்ளார். இந்த இரு பகுதியையும் அறிதல் நலமென இங்கு ஆரூர் விளக்கம் கூறுகிறேன்.

ஆர் கூர்மை ஆத்தி தேரின் அகத்துறு கதிரும் ஆகும்
- சூடாமணி நிகண்டு

அகத்துறு கதிர் என்பது சீவாதித்தனைக் குறிக்கும். சிவாதித்தனே தான் கீழ்த்துருவ நிலையில் அதோமுக சக்கரமான மூலாதாரத்தில் உருத்திர சோதியாக உள்ளார். அவரேதான் மேல் துருவத்தில் ஈசானானகிறார். மூலாதாரத்தில் அவர் சீவர்களுக்கு இன்பம் பெருக்கிக் காம வாழ்வளித்தவர் அவரே ஈசானராக வெளிப்படும் போது காமத்தை அழித்து ஞானத்தைக் கொடுப்பவர். அதனாலே ஈசான மூர்த்தியே காமேசுவரன் காமேசுவரியாக மூலாதாரத்தில் விளங்குபவர்.

மூலாதாரத்திலுள்ள காமேசுவரன் காமசுவரியைத் திருவாசகத்தில் ஆரூரன் என்ற பேரால் குறிப்பிடப்பட்டுள்ளது".

மேலே கண்ட சிவயோகியாரின் விளக்கத்தை ஒட்டி நாம் இங்கே கருத்தில் கொள்ளவேண்டிய ஞானச் செயலாவது, ஆரூரிலிருந்து திருப்பெருந்துறை செல்கிற வழி நடையே யாகும். ஆரூர் என்பது மூலாதாரம், திருப்பெருந்துறை என்பது சகஸ்ரதளம். எனவே சித்தர்களின் மொழியிலே ஆரூரிலிருந்து திருப்பெருந்துறைக்குச் செல்லும் வழி முதுகந்தண்டே யாகும். இது அகஉடலின் அகப்பயணமாகிய ஞானச் செலவு. இதைக் கற்பிக்கின்ற ஞானகுருவே இறைவன் என்பது சித்தர் வாக்கு. எல்லா உயிர்கட்கும், எல்லாச் சீவர்களுக்கும் சிவமே குரு. விஞ்ஞானகலர்களுக்கு அவர் காரணமாகவும் காரியமாகவும் அமைகிறார்.

இந்தக் குருநுட்ப உண்மையைத்தான் சிவஞானபோதம் பாடுகிறது. "அவனே தானே யாகிய வந்நெறி யேக னாகி யிறைபணி நிற்க; மலமாயை தன்னொடு வல்வினை யின்றே" என்று!

இனி, சிவபுராணத்தின் அடுத்த அடி வருமாறு:

ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க

இந்த வரிக்கு உரை சொல்லுகிற சமயிகள் ஆகம வடிவே நின்று உயிர்களுக்கு அருள்செய்பவனின் கழல் வாழ்க என்பர். ஆகமம் என்பது உயிர்களுக்கு மலநாசம் செய்து ஞானத்தை விளக்குவது என்று மரபுவழி உரை கூறுகிறது. அண்ணித்தல் என்றால் அணுகி அருள் வழங்குதல் என்ற பொருள் வெளிப்படை.

இனி, சித்தர் வழியிலே இதற்கு வழங்குகிற பொருள், ஆகமம் என்ற சொல்லுக்கு வெவ்வேறு வகையான விளக்கங்களைத் தருகின்றது. சான்றாக, ஆகமம் என்ற சொல்லை ஆ+கமம் என்று பிரித்தும்கூடப் பொருள் கூறப்பெறுகிறது. இந்த விரிவான சர்ச்சைகளுக்கு அவசியமில்லாத முறையிலே, வேலியாக நின்று என்னைக் காத்து அருள்பவன் என்று பொருள் கூறும் பெரியோர்களும் உண்டு. இந்தப் பொருளைக் கூறுவதற்காக ஆகமம் என்ற சொல்லை இரண்டு கூறாகப் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை. குருவானவர் அருகிலேயே நின்று வழிகாட்டியாகவும், காத்துப்புரக்கும் திருவருளாகவும் துணைசெய்வதால் அவனை ஆகமமாகிய வழிகாட்டியாகவும், அண்மையில் நின்று அருளும் 'அண்ணிக்கும் துணை' யாகவும் பொருள் கொள்வதே சாலும்.

இனி, அடுத்த வரி வருமாறு:

ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க

இந்த வரி சிவபுராணத்தில் மிகவும் புகழ்பெற்ற அடியாகும். இதற்குச் சமயிகள் வழக்கம்போல் இறைவன் ஒருவனாகவும் பல தோற்றங்களிலும் காட்சி தருகிறான் என்று பொருள் கூறுவர். சித்தர்கள் கூறும் ஞானப் பொருளிலும் அதிக் வேறுபாடு இல்லை. விளக்கும் முறையிலே ஞானிகள் விரிவான சில உவமைகளை எடுத்தாள்கிறார்கள்.

கீதையிலும், உபநிடதத்திலும் வேறு பல நூல்களிலும் குடத்தில் தண்ணீர் பற்றியும், குடத்துத் தண்ணீரில் காணுகிற கதிரவன் நிழல் பற்றியும் பற்பல வடிவங்களிலே உவமைகள் கூறப் பெற்றுள்ளன. திருமூலரும் இந்த உவமையைக் கையாளுகிறார்.

சூரியன் வானத்திலே ஒருவனாக, ஏகனாக நம் கண்முன் தோன்றுகிறான். பல சிறிய குடங்களிலே தண்ணீர் ஏந்திச் சூரியன் எதிரில் வைக்கும்பொழுது, ஒவ்வொரு குடத்துத் தண்ணீரிலும் சூரியனைக் காணுகின்றோம். அப்போது சூரியன் ஒருவனாகவும், பலராகவும் நின்றவனாகின்றான். இறைவனுடைய தன்மையும் இதுவே. தான் அநாதியான மூலப்பொருளாய் ஏகனாய் நிற்கிறான். அதே சமயம் உயிர்களிடத்தும் அவன் உறைகிறான். இந்த உவமையை எடுத்துக்காட்டுகிற திருமூலர், குடத்திற்குள் சூரியன் அடங்கி விடுவதில்லை என்ற பேருண்மையையும் தமது திருமந்திரத்தில் அழுத்தம் கொடுத்துப் பாடுகிறார்.

கடங்கடந் தோறுங் கதிரவன் தோன்றில்
அடங்கிட மூடில் அவற்றில் அடங்கான்
விடங்கொண்ட கண்டனும் மேவிய காயத்
தடங்கிட நின்றதும் அப்பரி சாமே.

என்பது அத்திருமந்திரம்.

மட்குடத்துக்குள்ளே தோன்றுகின்ற சூரியன், பேருருவாகிய பெருஞ் சூரியனே அல்லன் என்பது ஒருபுறம் இருக்க, தண்ணீரில் நிழல் விடுகிற கதிரவன், குடத்துக்குள் நின்ற போதிலும் அதனுள் அடங்காது நிற்கிறான். அதோடுகூடக் குடத்துக்கு உள்ளும் புறமுமாக அவன் விளங்குகிறான். திருமூலருடைய திருமந்திரத்தின் உவமை இத்தனை பொருளோடு விரிகிறது என்பதை உய்த்துணரவேண்டும்.

இனி, சிவபுராணத்தின் அடுத்த அடிக்கு வருவோம்.

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க

இந்த வரிக்கு மரபைஒட்டிப் பொருள் கூறுகிற சிவ சமயிகள், வேகம் என்பதை, மனத்தின் ஐம்புலன் வழியே இயங்குகிற செயல்களின் வேகம் என்று பொருள் கூறுவர். இந்த வேகத்தைக் கெடுத்து ஆள்வது என்பது, "உலக இச்சைகளிலே ஈடுபட்டு உழல்கின்ற மனத்தை, அவற்றினின்று காப்பாற்றுவதன் பொருட்டு, அந்த மன